ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்- 322) Jul (1) / 2020

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. ஸங்கல்ப ஸூர்யோதயம் 5

3. தத்வ த்ரயம்...7

4. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)...11

5. ஸ்தோத்ர ரத்னம் (பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)..........................16

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 142)

அத்யாயம் – 29 – அக்னீஷோம வேறுபாடுகள்

சக்ர:-

1. சுத்தாசுத்த ஷடத்வாக்ய விசித்ர நிர்மாணபித்தயே
   நம: ஸ்ரீவத்ஸபாமிந்யை பவ ஸந்தாப சாந்தயே

பொருள் – இந்த்ரன் மஹாலக்ஷ்மியிடம், "சுத்தம் மற்றும் அசுத்தம் என்பதை உள்ளடக்கிய ஆறு நிலைகளில் அமைந்துள்ள ஸ்ருஷ்டியின் ஆதாரமான உன்னைப் பணிகிறேன். ஸ்ரீவத்ஸம் கொண்ட நாராயணனின் பத்னியும், இந்த லோகங்களின் துன்பங்களை நீக்குபவளும் ஆகிய உன்னைப் பணிகிறேன்", என்றான்.

2. அக்நீஷோம விபாகம் மே க்ரியாபூதி வித்யாம் அபி
   ப்ரூஹி மே தத்த்வத: பத்மே வித்யாயாஸ்தாரிகாக்ருதே:

பொருள் – மேலும் இந்த்ரன், "தாமரையில் வீற்றுள்ளவளே! அக்னீ மற்றும் ஷோமம் ஆகியவற்றுக்கு இடையே உள்ள பேதங்களை நான் அறியவேண்டும். மேலும் க்ரியாசக்தி மற்றும் பூசக்தி குறித்தும் அறியவேண்டும். தாரிகா வித்யை குறித்தும் நான் அறியவேண்டும்", என்றான்.

ஶ்ரீ:-

3. வ்யாபகம் யத் பரம் ப்ரஹ்ம சக்திர்நாராயணீ ஹி யா
ஸா ஹி அஹம் பரிணாமேந பவாமி ப்ரணவாக்ருதி:

பொருள் – மஹாலக்ஷ்மீ கூறத் தொடங்குகிறாள்: எங்கும் வ்யாபித்து நிற்கும் பரப்ரஹ்மத்தை நான் வெளிப்படுத்துகிறேன். நாராயணனுடைய சக்தியாக நானே உள்ளேன். ப்ரணவ வடிவில் வெளிப்படுகிறேன்.

4. அக்நீஷோமவிபாகம் மே தாரிகாயா நிசாமய
க்ரியாபூதி விதாநம் ச யதாவத் ஸுரநந்தந

பொருள் – தேவர்களின் தலைவனே! அக்னி மற்றும் ஷோமம் ஆகியவையாக நிற்கும் தாரிகா வித்யையின் வேறுபாடுகளை அறிவாயாக. க்ரியாசக்தி மற்றும் பூசக்தி குறித்தும் உனக்கு நான் விளக்குகிறேன்.

5. உந்மேஷ: பரமோ விஷ்ணோராத்ய: ஷாட்குண்யசிந்மய:
ஸாஹம் ஸம்ப்ருதஸம்பாரா சக்திஸ்தே கதிதா புரா

பொருள் – நான் முன்பே உரைத்தது போன்று, மஹாவிஷ்ணுவின் சக்தியாக நானே உள்ளேன். அனைத்தையும் தாங்குபவளாக உள்ளேன் (அல்லது அனைத்தையும் தாங்கும் மஹாவிஷ்ணுவின் சக்தியாக நானே உள்ளேன் என்றும் கொள்ளலாம்). ஆறு திவ்யமான குணங்கள் கொண்ட மஹாவிஷ்ணுவின் உயர்ந்த ஸ்ருஷ்டி நிலையாக நானே உள்ளேன்.

ஶ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஶ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

ஸங்கல்ப ஸூர்யோதயம்

(பகுதி – 9)

14. விசித்ராஸிநீ விபுகவைரிவரூதிநீநாம்
பத்மாஸநேந பரிசாரவிதௌ ப்ரயுக்தா
உத்ப்ரேக்ஷ்யதே புதஜநைர் உபபத்தி பூம்நா
கண்டா ஹரே: ஸமஜநிஷ்ட யதாத்மநேதி

பொருள் – (ஸூத்ரதாரன் கூறுவது) "தேவர்களுக்கு விரோதிகளாக உள்ள அஸுரர்களை விரட்டுவதும், நான்முகனால் தனது பூஜைக்குப் பயன்படுத்தப்படுவதும், திருமலையில் உள்ளதும் ஆகிய மணியானது, இவர் ரூபத்தில் தோன்றியது", என்பதாகவே பல ப்ரமாணங்களைச் சான்றாகக் கொண்டும், தகுந்த காரணங்களைக் கொண்டும் சான்றோர்கள் தீர்மானித்தனர்.

15. விம்சயப்தே விச்ருத நாநாவித வித்யஸ்
த்ரிம்சத்வாரம் ச்ராவித சாரீர பாஷ்ய:
ச்ரேய: ஸ்ரீமாந் வேங்கடநாத: ச்ருதிபத்யம்
நாத ப்ரீத்யை நாடகமர்த்யே வ்யதிதைதம்

பொருள் – (ஸூத்ரதாரன் கூறுவது) அவருடைய வேங்கடநாதர் தனது இருபது வயதிற்குள் பலவிதமான வித்யைகளைக் கற்றார். முப்பது முறை ஸ்ரீபாஷ்ய ப்ரவசனம் செய்தார். பகவானுடைய மகிழ்விற்காக, வாழ்வின் முக்கியமான புருஷார்த்தமாகிய மோக்ஷத்தைக் குறித்து, புகழ் பெற்ற இந்த நாடகத்தை இயற்றினார்.

[நடி ஸூத்ரதாரனிடம்] ஐயா! இவருடைய மனமானது எப்போதும் பகவத்விஷயமாக உள்ள வேதாந்தத்தில் மட்டுமே ஈடுபட்டதாக உள்ளது. இவருடைய வாக்கானது, வேதங்களுக்கு விரோதமாகப் பொருள் உரைப்பவர்கள் என்னும் பெரும் கானகத்தை அழிக்கவல்ல ஆயுதம் போன்று, கடினமான தர்க்கங்கள் கொண்டதாக உள்ளது. நம்மால் மற்றவர்களுக்கு இன்பம் அளிக்கக்கூடிய விதமாக உள்ள இந்த நாடகமாக இவருடைய வாக்கு எவ்விதம் அமையும்?

[ஸூத்ரதாரன் நடியிடம் புன்னகையுடன்] நீ கேட்ட இரண்டு கேள்விகளில் முதல் கேள்வியைக் காண்போம். இவர், எப்போதும் பகவானுடைய மகிழ்ச்சியை மட்டுமே கருத்தில் கொண்டவராக, மற்ற சிந்தனைகளுக்கு சிறிதும் இடம் அளிக்காதவராக உள்ளார் என்று நீ எண்ணுகிறாயா?

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச் செய்த

தத்வ த்ரயம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 18)

40. சேஷமாகையாவது சந்தந குஸுமதாம்பூலாதிகளைப் போலே, அவனுக்கு இஷ்ட விநியோகார்ஹமாயிருக்கை.

வ்யாக்யானம் - (சேஷமாகையாவது சந்தந குஸும தாம்பூலாதிகளைப் போலே அவனுக்கு இஷ்ட விநியோகார்ஹமாயிருக்கை) அதாவது, சந்தந குஸுமாதி பதார்த்தங்கள் தனக்கென்ன இருப்பதோராகாரமின்றிக்கே பூசுமவனுக்கும் சூடுமவனுக்கும் உறுப்பாய், விநியோகம் கொள்ளுமவனுக்குத்தானும் விநியோகம் கொண்டு, தானுகந்த விஷயங்களுக்கும் கொடுக்கலாம்படி இஷ்ட விநியோகார்ஹமாயிருக்குமாப்போலே சேதந வஸ்துவாயிருக்க ஸ்வப்ரயோஜந கந்தமின்றிக்கே தன்னுடைய ஸ்வரூப ஸ்வபாவ வைலக்ஷண்யமெல்லாவற்றாலும் சேஷிக்கு அதிசயகரமாய், விநியோக தசையில் அவனுக்குத் தானும் விநியோகம் கொண்டு "அடியார்க்கென்னை யாட்படுத்த விமலன்" என்கிறபடியே தானுகந்தவர்களுக்கும் உறுப்பாக்கலாம்படி வேண்டின விநியோகத்துக்கு யோக்யமாயிருக்கை என்றபடி. சித் த்ரவயத்துக்கு அசித் த்ரவயங்களை த்ருஷ்டாந்தமாகச் சொல்லிற்று பாரதந்த்ரியாதிசயம் சொல்லுகைக்காகவிறே ஆத்மஸ்வரூப யாதாத்ம்யம் இதுவாகையாலேயிறே ப்ராப்ய நிஷ்கர்ஷம் பண்ணுகிற தசையிலே "தனக்கேயாக வெனைக் கொள்ளுமீதே" என்று ஆழ்வார் அருளிச்செய்தது.

விளக்கம் - சந்தனம், மலர்கள் போன்ற பொருள்கள் பலவும் தங்களுக்கு என்று இருக்கின்ற நிலை ஏதும் இல்லாமல், தங்களைப் பூசிக் கொள்பவர்கள் மற்றும்

சூட்டிக் கொள்பவர்களுக்கு அவை உபயோகமாக உள்ளன; அந்த மனிதர்கள் தங்களுக்கு விருப்பமானவர்களுக்கு அவற்றை அளிப்பதற்கு ஏற்றவையாகவும் அவை உள்ளன. இதனைப் போன்று சேதந வஸ்துக்களாக உள்ளவை “தனது பயனுக்காக” என்ற சுயநல தோஷம் இல்லாமல், தங்களுடைய “ஸ்வரூபம், ஸ்வபாவம், மேன்மை” போன்ற பலவற்றாலும் தங்களுடைய எஜமானனாகிய ஸர்வேச்வரனுக்கு அதிசயத்தை ஏற்படுத்தக் கூடியவையாகவும், அவனுக்குப் பயன்படும் நேரங்களில் பயன்படும்விதமாக உள்ளவையாகவும், அமலனாதிபிரான் (1) - அடியார்க்கு என்னை ஆட்படுத்த விமலன் - என்று கூறுவதற்கு ஏற்ப ஸர்வேச்வரனாகிய அவன் யாரை விரும்புகிறனோ அவர்களுக்கும் அடிமையாக்கலாம்படி இருப்பவையாகவும் உள்ள தகுதியுடன் இருத்தல் வேண்டும். இங்கு அசேதந வஸ்துக்களை உதாரணமாகக் காண்பித்து சேதந வஸ்துக்கள் ஏன் உணர்த்தப்பட்டன என்றால், மற்றவர்கள் வசப்பட்டிருத்தல் என்பதைக் கூறவே ஆகும். ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபம் இதுவே ஆகும் என்பதால் அல்லவோ, அடையப்படும் இலக்கு குறித்து உறுதிபட உரைக்கும்போது, திருவாய்மொழி (2-9-4) – தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே – என்று ஆழ்வார் அருளிச்செய்தார்.

வ்யாக்யானம் – “பரகதாதிசயாதாநேச்சயா உபாதேயத்வமேவ யஸ்ய ஸ்வரூபம், ஸ சேஷ: பரச்சேஷீ” என்று சேஷசேஷித்வ லக்ஷணம் பாஷ்யகாரராலே அருளிச்செயயப்பட்டது. இந்த லக்ஷண வாக்யார்த்தத்தை அநுஸரித்துக் கொண்டு, “இச்சயா யது பாதேயம் யஸ்யாதிசய ஸித்தயே உபயாநுபயைககஜுஷாதௌ சேஷசேஷிணௌ” என்று சேஷசேஷித்வ லக்ஷணத்தை அபியுக்தரானவர்களும் சொல்லி வைத்தார்கள்.

விளக்கம் – “பரகதாதிசயாதாநேச்சயா உபாதேயத்வமேவ யஸ்ய ஸ்வரூபம், ஸ சேஷ: பரச்சேஷீ – பிறருக்கு சந்தோஷத்தை உண்டு பண்ண வேண்டும் என்ற எண்ணம் எவைகளுக்குத் தன்மையோ, அவைகள் அனைத்தும் சேஷன் (அடிமை); மகிழ்வை அடைபவன் சேஷி (அடிமைச் செயலை ஏற்பவன்)” என்று இத்தகைய “அடிமை - எஜமானன்” இலக்கணம் குறித்து பாஷ்யகாரரால் அருளிச் செய்யப்பட்டது. இத்தகைய இலக்கணம் கூறும் வாக்கியத்தின் கருத்தை

அடியோற்றியே, இச்சயா யது பாதேயம் யஸ்யாதிசய ஸித்தயே உபயாநுபயைகைகஜுஷாதௌ சேஷசேஷிணௌ - எந்த ஒரு தலைவனுக்காக, எந்த ஒரு பொருள், இருவரை அடைதல் அல்லது ஒருவரை மட்டும் அடைதல் என உள்ளதோ (அதாவது தலைவனுடைய விருப்பதிற்கு ஏற்ப), அவர்கள் அடிமை மற்றும் எஜமானன் ஆவார்கள் - என்று “எஜமானன் – அடிமை” இலக்கணத்தைச் சான்றோர்களும் கூறினார்கள்.

வ்யாக்யானம் – “யதேஷ்ட விநியோகார்ஹம் சேஷ சப்தேந கத்யதே, ஈச்வரேண ஜகத் ஸர்வம் யதேஷ்டம் விநியுஜ்யதே” என்று சொல்லுகையாலே, சேஷத்வமாவது இஷ்ட விநியோகார்ஹத்வம் என்னுமிடம் சாஸ்த்ரஸித்தம்.

விளக்கம் – “யதேஷ்ட விநியோகார்ஹம் சேஷ சப்தேந கத்யதே, ஈச்வரேண ஜகத் ஸர்வம் யதேஷ்டம் விநியுஜ்யதே - ஒருவர் விருப்பத்திற்கு ஏற்ப பயன் கொள்ளத் தகுதியாக உள்ள நிலையே அடிமை என்று கூறப்படுகிறது. ஸர்வேச்வரனால் அனைத்து லோகங்களும் தனது விருப்பப்படி உபயோகப்படுத்தப்படுகிறது” என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே, அடிமைத்தன்மை என்பது “விருப்பத்திற்கு ஏற்ப உபயோகம் செய்து கொள்ளத் தகுதியானது” என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

வ்யாக்யானம் - இப்படி ஈச்வர விஷயத்தில் ஆத்மாவுக்குண்டான சேஷத்வம்தான், “யஸ்யாஸ்யாமி ந தமந்தரேமி”, “பரவாநஸ்மி காகுத்ஸ்த்த த்வயி வர்ஷசதம் ஸ்திதே”, “தாஸபூதாஸ் ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:, நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவ ச”, “ஸ்வோஜ்ஜீவநேச்சா யதி தே ஸ்வஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி, ஆத்மதாஸ்யம் ஹரேஸ் ஸ்வாம்யம் ஸ்வபாவஞ்ச ஸதா ஸ்மர” என்று ச்ருதி ஸ்ம்ருத்யாதிகளிலே சொல்லப்படா நின்றதிறே.

விளக்கம் - இவ்விதம் பகவத் விஷயதில் ஆத்மாவிற்கு உள்ள அடிமைத்தனமானது, யஜுர்வேதம் - யஸ்யாஸ்யாமி ந தமந்தரேமி – யாருக்கு நான் அடிமையாக உள்ளேனோ, அவனை நான் மீறமாட்டேன் – என்றும், ஆரண்யகாண்டம் (15-6) - பரவாநஸ்மி காகுத்ஸ்த்த த்வயி வர்ஷசதம் ஸ்திதே - காகுஸ்த்த வம்சத்தில் வந்தவனே! பல வருடங்கள் நீ உள்ளவரை நான் உனக்கு வசப்பட்டு நிற்பேன் -

என்றும், தாஸபூதாஸ் ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:, நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவ ச - அனைத்து ஆத்மாக்களுக்கும் ஸர்வேச்வரனுக்கு இயல்பாகவே அடிமையானவர்கள்; இந்த லோகத்திலும் மோக்ஷ நிலையிலும் அவர்களுக்குச் சுதந்திரம் என்னும் இலக்கணம் இல்லை - என்றும், ஸ்ரீவிஷ்ணுதத்வம் - ஸ்வோஜ்ஜீவநேச்சா யதி தே ஸ்வஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி, ஆத்மதாஸ்யம் ஹரேஸ் ஸ்வாம்யம் ஸ்வபாவஞ்ச ஸதா ஸ்மர - உனக்குக் கரையேறுவதற்கான விருப்பம் இருந்தால் அல்லது அழியாமல் இருக்கவேண்டும் என்ற எண்ணம் இருந்தால், இயல்பாகவே உள்ள ஆத்மாவின் தன்மையையும், ஸ்ரீஹரியான ஈச்வரனுடைய எஜமானனாக உள்ள தன்மையையும் எப்போதும் சிந்தித்தபடி இருப்பாயாக - என்று ச்ருதி மற்றும் ஸ்ம்ருதிகளில் கூறப்பட்டது அல்லவா?

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 287)

4-6-2 திசைக்கின்றதே இவள் நோய் இது மிக்க பெருந்தெய்வம்
இசைப்பின்றி நீரணங்காடும் இளந்தெய்வமன்றிது
திசைப்பின்றியே சங்குசக்கரமென்றிவள் கேட்க நீர்
இசைக்கிற்றிராகில் நன்றேயில் பெறுமிது காண்மினே

பொருள் - இவளுக்கும் உங்களுக்கும் எந்தவிதமான வேறுபாடும் இன்றி அறிவை மயக்குகின்ற இந்த நோயானது, அனைத்தையும் விட உயர்ந்ததும், அளவிட இயலாத மாஹாத்ம்யம் கொண்டதும் ஆகிய ஒரு தெய்வத்தால் வந்தாகும். உங்களுக்கும் இவளுடைய நோய்க்கும் பொருத்தம் இன்றி நீங்கள் அணங்கு ஆடுகின்ற அற்பதேவதையால் வந்த நோய் அல்ல. தன்னைக் குறித்து மற்றவர்கள் தாழ்வாக எண்ணுவார்கள் என்ற மயக்கம் இல்லாமல், அனைத்தையும் நிர்வஹிக்கும் அந்த தெய்வத்திற்கே உரித்தாக உள்ளதான "சங்கு, சக்கரம்" என்று இவள் கூறுவதை நீங்கள் கேட்டால் உங்களுக்கு நலமே ஆகும். இவளுடைய விருப்பம் நிறைவேறும். இதனை நீங்களே காண்பீர்களாக என்று தோழி உரைத்தாள்.

அவதாரிகை – க்ஷுத்ர தேவதா சாந்தியால் இந்நோய் போக்குகை அரிது, பகவத் விஷயத்தைச் சொல்லில் இவளைப் பெறலாம் என்கிறாள்.

விளக்கம் - தோழியானவள், "தாழ்ந்த தேவதைகளுக்கு செய்யப்படும் பரிகார பூஜைகளால் இவளுடைய நோயை விலக்குவது அரிதாகும். பகவத்விஷயத்தை உரைத்து மட்டுமே இவளுடைய பழைய நிலையை மீண்டும் அடையலாம்", என்கிறாள்.

வ்யாக்யானம் - (திசைக்கின்றதே இவள் நோய்) இவள் அவன் குண நிமித்தமாக அறிவு கெடாநின்றாள்; நீங்கள் இவள் நோய் நிமித்தமாக அறிவு கெடாநின்றிகோள். இவள் நோவுக்கு நிதாநம் நீங்கள் "அவனடியாக வந்தது" என்று அறியமாட்டுகிறிலிகோள். "திசைக்கின்றதே" என்கையாலே, தாய்மாராகையாலே கௌரவித்து வார்த்தை சொல்ல வேணுமிறே. இவள் நோய் நிமித்தமாக அறிவு கெடுவதே நாம்! "நாங்கள் அறிந்திலோமாகில், இதுக்கு நிதாநமறிந்ததாயாயிருக்கிற நீ பின்னைச் சொல்லிக் காணாய்" என்ன, (இது மிக்க பெருந்தெய்வம்) "கம்பீர: பரமோதேவ:" என்றும், "வானோர் தலைமகனாம் சீராயின தெய்வ நன்னோய்" என்றும் சொல்லுகிறபடியே, ஸர்வேச்வரனடியாக வந்த கனவிய நோவு இது; இவள் நோவுக்கும், இந்நோவுக்கும் நிதாந பூதனானவனுக்கும் உண்டான அபேதத்தை புத்தி பண்ணி, "இது மிக்க பெருந்தெய்வம்" என்று இது தன்னை அவனாகச் சொல்லுகிறாள்.

விளக்கம் - (திசைக்கின்றதே இவள் நோய்) - இவள், அவனுடைய குணங்கள் காரணமாக, தனது அறிவிழந்து நிற்கிறாள்; நீங்கள் இவள் காரணமாக உங்கள் அறிவிழந்து நிற்கிறீர்கள். இவளுடைய நோய்க்கான காரணம் "அவன் மூலமாகவே ஏற்பட்டது", என்று நீங்கள் அறியவில்லை. இங்கு தாய்மார்கள் குறித்து உரைப்பதால் மிகுந்த மதிப்புடன் "திசைக்கின்றதே" என்று கூறுகிறாள். "இவளுடைய நோய்க்கான காரணத்தை அறியாமல் நாம் அறிவு தடுமாறி நிற்கிறோம்", என்றாள். இதனை கேட்ட தாய்மார்கள் தோழியிடம், "நாங்கள் இந்த நோய்க்கான காரணத்தை அறியவில்லை. ஆனாலும் இதனைக் குறித்து அறிந்த நீ உரைக்கலாம் அல்லவோ?", என்றனர். இதற்கு விடை அளிக்கிறாள். (இது மிக்க பெருந்தெய்வம்) – கம்பீர: பரமோதேவ: - கம்பீரமான உயர்ந்த தேவன் – என்றும், திருவிருத்தம் (53) - வானோர் தலைமகனாம் சீராயின தெய்வ நன்னோய் - என்றும் கூறுவதற்கு ஏற்ப உள்ள ஸர்வேச்வரன் காரணமாக வந்த நோய். இவளுடைய

நோய், அந்த நோய்க்கான காரணம் என்று உள்ளவன் ஆகிய இரண்டிற்கும் உள்ள வேற்றுமை இன்மையை எண்ணியவளாக, "இது மிக்க பெரும் தெய்வம்" என்கிறாள்; அதாவது இந்த நோய் என்பதையே அவனாவான் என்று உரைக்கிறாள்.

வ்யாக்யானம் - (இசைப்பின்றி இத்யாதி) நீங்கள் பண்ணுகிற பரிஹாரத்துக்கும் உங்களுக்கும் ஒரு சேர்த்தியில்லை; இந்த நோய்க்கும் இவளுக்கும் ஒரு சேர்த்தியில்லை. முதல் தன்னிலே பகவத்விஷயத்திலே கைவைத்தார் கொள்ளுகைக்கு ஸம்பாவனையுடைய நோவன்று இதுதான். ஒரு வழியாலும் ஒரு சேர்த்தியின்றிக்கே, இது உங்களுக்குச் சேர்ந்ததல்ல; உங்கள் மகளாய் நோவு கொண்ட இவளுக்குச் சேர்ந்ததல்ல; நோவுக்கு நிதாந பூதனானவனுக்குச் சேர்ந்ததல்ல; இதர தேவதைகள் இந்நிலத்தில் வந்து புகுர மாட்டாமையாலே நீங்கள் நினைக்கிற தேவதைகளுக்குச் சேர்ந்ததல்ல. இங்கே அருளிச்செய்யும் வார்த்தை - பிள்ளையுறங்காவில்லிதாஸர் குடிமகனொருவனுக்கு ஐயனார் ஏறி வலிந்து நலிந்தவாறே, "உனக்கு வேண்டுவதென்?" என்று கேட்க, "எனக்குப் பாலும் பழமுமாய் உண்ணவேணும்; சாந்தும் புழுகும் பூசவேணும்; நல்ல புடைவை உடுக்கவேணும்; நல்ல ஆபரணம் பூண வேணும்; தண்டேற வேணும்; அணுக்கனிட வேணும்" என்ன, அவர்களும் "அப்படியே செய்கிறோம்" என்று பிள்ளை திருமாளிகையிலே வந்து, சாந்து புழுகு ஆபரணாதிகள் வாங்கிக் கொண்டு போய் அவற்றை அலங்கரித்து சாந்தியும் பண்ணிவிட்டு வந்த அவ்விரா, பண்டையிலும் இரட்டியாக அவனை வலிக்க, "இது என்?", என்று கேட்க, "பிள்ளை சாத்திகிறவற்றையெல்லாம் கொண்டு வந்திகோள்; அவர்கள் சாத்துகிற அணுக்கனை யிட்டிகோள்; நான் அதின் கீழே போவேனோ? என்னை வெயிலிலே கொண்டு போனிகோள், என் உடம்பிலே நெருப்பை வழியட்டினாற்போலே அவர் சாத்துகிறவற்றைப் பூசினிகோள், அரிகண்டமிட்டாற்போலே அவர் சார்த்துகிற ஆபரணத்தைப் பூட்டினிகோள்; நீங்கள் செய்த செய்த செயலுக்கு இவனைக் கொண்டல்லது போகேன்" என்று வலித்தாதம். ஆகையால், அவற்றுக்குச் சேராது. (நீர்) பகவத் விஷயத்திலே விக்ருதராகக் கடவ நீங்கள். (அணங்காடும் இளந்தெய்வமன்று இது) தேவாவிஷ்டராய்க் கொண்டு ஆடுகிற மறுமுட்டுப் பொறாத க்ஷுத்ர தேவதையடியாக வந்த நோயன்று இது.

விளக்கம் - (இசைப்பு இன்றி இத்யாதி) - நீங்கள் செய்கின்ற பரிகாரத்திற்கும், பகவத் விஷயத்தில் ஈடுபாடு கொண்ட உங்களுக்கும் எந்தவிதமான சேர்த்தியும் இல்லை. இந்த நோய்க்கும் இவளுக்கும் எந்தவிதமான சேர்த்தியும் இல்லை. பவவத் விஷயத்தில் கைவைத்தவர்கள் கொள்வதற்கு ஏற்ற நோய் அல்ல; எந்த விதத்திலும் சேராதது என்பதால், இது உங்களைச் சேர்ந்ததல்ல; உங்கள் மகளாக இருந்து நோய் அடைந்ததால் இவளைச் சேர்ந்தது அல்ல; நோய்க்கான காரணமாக உள்ளவனையும் சேர்ந்தது அல்ல. மற்ற தேவதைகள் இந்த இடத்தில் வர இயலாது என்பதால், அந்தத் தேவதைகளையும் சேர்ந்தது அல்ல. சிறந்த பகவதர்கள் இருப்பிடத்தை தாழ்ந்த தேவதைகள் வந்து சேராது என்பதற்கு ஒரு நிகழ்வைக் கூறுகிறார். பிள்ளை உறங்காவில்லிதாசரிடம் படியாளாக உள்ள ஒருவன் மீது ஐயனார் வந்து ஏறியது. அப்போது ஐயனாரிடம், “உனக்கு என்ன வேண்டும்?”, என்று கேட்போது, “எனக்குப் பாலும் பழமும் உண்ணவேண்டும்; சாந்தும் புனுகும் பூசவேணும்; நல்ல புடவை உடுத்தவேண்டும்; நல்ல ஆபரணம் பூணவேண்டும்; பல்லக்கு ஏறவேண்டும்; குடை பிடிக்கவேண்டும்” என்று பதில் வந்தது. உடனே அவர்களும், “அப்படியே செய்கிறோம்” என்று கூறினார்கள். தொடர்ந்து, பிள்ளை உறங்காவில்லிதாஸரிடம் திருமாளிகைக்கு வந்து சாந்து, புனுகு, ஆபரணம் போன்றவற்றைப் பெற்றுக் கொண்டு அவற்றை அலங்கரித்து, ஐயனாருக்குச் சாந்தி செய்தனர்; அன்று இரவு முன்பைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாக ஈடுபாட்டுடன் ஐயனார் இறங்கியபோது அவர்கள், “இது என்ன?”, என்று கேட்டபோது, “பிள்ளை உறங்காவில்லிதாசர் சார்த்திக் கொள்ளும் அனைத்தையும் எனக்கு அளித்தீர்கள். அவருடைய குடையை எனக்குச் சேர்த்தீர்கள். நான் அதன் கீழ் செல்வேனோ? என்னை வெயிலில் கொண்டு சென்றீர்கள். எனது உடலில் நெருப்பைப் பூசுவது போன்று அவர் சார்த்திக் கொண்ட பலவற்றையும் பூசினீர்கள். அரிகண்டம் இட்டது போன்று அவருடைய ஆபரணங்களை அணிவித்தீர்கள். நீங்கள் செய்த இந்தத் தகாத செயல்களுக்கு, நான் இந்த படியாளை எடுத்துக் கொண்டு செல்வேன் அல்லாமல் இங்கிருந்து செல்லமாட்டேன்”, என்றது. ஆகவே அது போன்று உங்களுடைய செய்கைகள் எதுவும் இவள் விஷயத்தில் சேராது. (நீர்) - பகவத் விஷயத்தில் மிகுந்த ஈடுபாடும் பரவசமும் கொள்ளும் நீங்கள். (அணங்கு ஆடும் இளம் தெய்வம் அன்று) - தெய்வம் ஏறுபவராகக் கொண்டு

ஆடுகின்றதும், எந்த ஒரு பயனும் பின்னர் ஏற்படாததும் ஆகிய தாழ்ந்த தேவதை காரணமாக வந்த நோய் இது அல்ல.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி ஆளவந்தார் அருளிச் செய்த

ஸ்தோத்ர ரத்னம்

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை

அருளிச் செய்த வ்யாக்யானம்

(பகுதி – 3)

வ்யாக்யானம் - பகவத்ப்ராப்திக்கு உக்த தோஷங்களின்றியிருக்குமளவன்றிக்கே, “நிரஸ்தாதியயாஹ்லாத ஸுகபாவைக லக்ஷணா” என்கிறபடியே, நிரதிசய ஸுகரூபமாய், “ஏஷ ஹ்யேவாநந்தயாதி”, “பரமம் ஸாம்யமுபைதி”, “தம்மையே ஒக்க அருள்செய்வர்” என்கிறபடியே ஆச்ரிதரைத் தன்னைப்போலே ஆனந்திப்பிக்கக் கடவனாய், “தஸ்யாஹம் ஸுலப:” என்று அயத்நஸாத்யமாய், ப்ராப்த புருஷார்த்தமுமாயிருக்கையாலே இதுவே புருஷார்த்தமென்று அத்யவஸித்து; அந்த பகவத் ப்ராப்தியாகிறதும், “ப்ரதாந க்ஷேத்ரஜ்ஞ பதிர் குணேச:”, “ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீச நீசௌ”, “தமீச்வராணாம் பரமம் மஹேச்வரம்”, “தாஸோஹம் வாஸுதேவஸ்ய”, “தாஸ பூதாஸ் ஸ்வதஸ்ஸர்வே”, “தாஸோஹம் கோஸலேந்த்ரஸ்ய”, “யஸ்யாத்மா சரீரம்”, “யஸ்யாக்ஷரம் சரீரம்”, “அந்த:ப்ரவிஷ்டச்சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா”, “பூ: ப்ராணிநஸ் ஸர்வ ஏவ குஹாசயஸ்ய”, “தாநி ஸர்வாணி தத்வபு:” என்று ஜீவபரர்களுக்கு அநந்யார்ஹ சேஷ சேஷி பாவேந ஸம்பந்தத்தைச் சொல்லி,

விளக்கம் - பகவானை அடைதல் என்பதில் மேலே கூறப்பட்ட தோஷங்கள் ஏதும் இல்லை. அது மட்டும் அல்லாமல், ஸ்ரீவிபு. (6-5-59) - நிரஸ்தாதியயாஹ்லாத ஸுகபாவைக லக்ஷணா - தனக்கு மேல் ஏதும் இல்லாத ஆனந்தரூபமாகவும், சுகமாக உள்ளதையே லக்ஷணமாகக் கொண்டதும் – என்று கூறுவதற்கு ஏற்ப எல்லையற்ற ஸுகரூபமாக உள்ளான்; தை. (2-7) – ஏஷ ஹி ஏவ ஆநந்தயதி - இந்த

ஆனந்தமயனே ஆனந்தம் அடையும்படிச் செய்கிறான் – என்றும், முண்டக. (3-1-3) – பரமம் ஸாம்யமுபைதி - தன்னைப் போன்று அனைத்தையும் - என்றும், பெரியதிருமொழி (11-8-5) – தம்மையே ஒக்க அருள்செய்வர் – என்றும் கூறுவதற்கு ஏற்ப தன்னுடைய அடியார்களைத் தன்னைப் போன்றே ஆனந்தம் பெறும்படிச் செய்பவனாக உள்ளான்; கீதை (8-14) - தஸ்யாஹம் ஸுலப: - அவனுக்கு நான் எளிதில் அடையத்தக்கவனாக உள்ளேன் - என்று எந்தவிதமான முயற்சியும் இன்றி எளிதாகக் கிட்டக்கூடியவனாக உள்ளான்; மேலும், அடையத்தக்க புருஷார்த்தமாகவும் உள்ளான்; இந்த காரணங்களால், இவனே உயர்ந்த புருஷார்த்தம் ஆவான் என்று உறுதியாக்கினார். அப்படிப்பட்ட “பகவானை அடைதல்” என்பதும் பதிவிரதையான ஒருவளுக்கு கணவருக்குச் செய்யும் பணிவிடைகளே இலக்கணம் ஆகும் என்பது போன்று, எஜமானாகிய ஸர்வேச்வரனுக்குச் செய்யும் கைங்கர்யமே ஆகிறது என்று உறுதியாக்குகிறார்; இதனைக் கூறுவதற்கு முன்பாக, ச்வே. (6-10) - ப்ரதாந க்ஷேத்ரஜ்ஞ பதிர் குணேச: - ப்ரதானம் மற்றும் ஜீவாத்மாவிற்குப் பதியாக உள்ளவன், குணங்களுக்கு ஈசன் – என்றும், ச்வே. (1-9) - ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீச நீசௌ - அனைத்தும் அறிந்தவனாகவும், ஏதும் அறியாதவனாகவும், ஒருவன் ஈச்வரனாகவும், ஒருவன் ஈச்வரன் அல்லாதவனாகவும் இருவர் உள்ளனர் – என்றும், ச்வே. (6-7) - தமீச்வராணாம் பரமம் மஹேச்வரம் - மேலான மஹேச்வரன் – என்றும், தாஸோஹம் வாஸுதேவஸ்ய – நான் வாஸுதேவனுடைய அடிமை - என்றும், ஹாரிதஸ்ம்ருதி - தாஸ பூதாஸ் ஸ்வதஸ்ஸர்வே - அனைத்தும் இயல்பாகவே ஸர்வேச்வரனுக்கு அடிமையாகும் - என்றும், ஸுந்தரகாண்டம் (45-35) – தாஸோஹம் கோஸலேந்த்ரஸ்ய - கோசல நாட்டின் அரசனாகிய இராமனுக்கு நான் அடிமை – என்றும், ப்ரு. (5-7-22) - யஸ்யாத்மா சரீரம் - யாருக்கு ஆத்மா சரீரமோ - என்றும், ஸுபால. (7) - யஸ்யாக்ஷரம் சரீரம் - யாருக்கும் ஜீவாத்மா சரீரமோ – என்றும், தை. ஆர. (3-11) - அந்த: ப்ரவிஷ்ட: சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா – அனைவருக்கும் உள்ளே புகுந்து, அனைத்தையும் நியமித்தபடி - என்றும், ஆபஸ்தம்பஸூத்ரம் (22-1) – பூ: ப்ராணிநஸ் ஸர்வ ஏவ குஹாசயஸ்ய - அனைத்து உயிர்களின் இதயம் என்ற குகையில் உள்ளவனும் - என்றும், ஸ்ரீவிபு. (2-22-86) - தாநி ஸர்வாணி தத்வபு: - அனைத்தும் அவனுடைய சரீரம் - என்றும் உள்ள பல வாக்கியங்கள் மூலமாக ஜீவாத்மா மற்றும் பரமாத்மாவிற்கு இடையே

“வேறு யாருக்கும் அடிமையாகத் தகுதி இல்லாத அடிமை - எஜமானன்” என்றுள்ள ஸம்பந்தத்தைக் கூறுகிறார்.

ஸ்வாமி ஆளவந்தார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்